வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 05.06.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 186 பக்கங்கள் : 12

# இந்த ஆண்டே ஜனாதிபதி தேர்தல் தேர்தல் குழுவின் முடிவு சரியானது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 05

அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதோடு 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தவுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம் சரியானது என்பதே எனது நிலைப்பாடு என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு குறித்து விளக்க மளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் சமிந்திர தயான் லெனவ என்பவர் என்னிடமோ அல்லது எனது சட்டத் தரணிகளுடனோ அது தொடர்பில் கலந்தாலோசிக்கவோ - ஆலோசனை பெறவோ

11

# வடக்கு, கிழக்கை மையப்படுத்தி சர்வதேச நன்கொடையாளர் மாநாடு

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி நாடு தழுவிய சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நடத்துவோம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் அல்-முனீரா மகளிர் கல்லூரிக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை அன்பளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த இரு மாகாணங்களிலும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் ஆயுதத் தரப்பினர் என சமூகத்தில் பல தரப்பினர் வாழ்ந்து வருகின்றனர்.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையர்களாக நாம் இந்நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். பிரிவினையை தொடர்ந்தால் நாட்டுக்கு எதிர் காலம் இல்லை.

11

# சஜித் அணியினர் ரணிலின் பக்கம்?

கொழும்பு, ஜூலை 05

ஐக்கிய மக்கள் சக்தியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைப்பதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் நெருங்கிய

11

# இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு யாழ்ப்பாணத்தில் மக்கள் அஞ்சலி!

யாழ்ப்பாணம்,ஜூலை 05

தமிழ் அரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று வியாழக்கிழமை காலை சிறப்பு விமானம் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட இரா. சம்பந்தனின் பூதவுடல், தமிழ் அரசுக் கட்சியின் தலைமை பணிமனையிலும் தந்தை செல்வா கேட்போர் கூடத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

முற்பகல் 10 மணிக்கு தமிழ் அரசு கட்சியின் தலைமை பணிமனைக்குக்

11



# கல்வி வெளியீட்டு பிரிவின் பணிப்பாளராக குயின்ரஸ்!



கொழும்பு, ஜூலை 05

கல்வி அமைச்சின் வெளியீட்டு பிரிவின் பணிப்பாளர் நாயகமாக ஜோன் குயின்ரஸ் இன்று வெள்ளிக்கிழமை நியமிக்கப்படவுள்ளார்.

முன்னதாக, ஜோன் குயின்ரஸ் வடக்கு மாகாண கல்வி பணிப்பாளராக பணியாற்றிவந்தவராவார்.

11

# கெஹலிய குடும்பத்தினரின் வங்கி கணக்குகள் முடக்கம்!

கொழும்பு, ஜூலை 05

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவின் குடும்பத்தினரின் 16 வங்கிக் கணக்குகள், 3 காப்புறுதி பத்திரங்களை முடக்கி உத்தரவிட்டுள்ளது கொழும்பு மேல் நீதிமன்றம்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விடுத்த விண்ணப்பத்துக்கு அமையவே இந்த உத்தரவு

11

# 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருட்களுக்கு அடிமை!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

நாட்டில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கையின் ஆறு மாத கால முன்னேற்றம், இரண்டாம் கட்ட நடவடிக்கை குறித்து செய்தியாளர்களுக்கு அறிவிக்கும் கூட்டத்திலேயே பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பல்வேறு பிரதேசங்களுக்கு போதைப்பொருட்களை விநியோகித்தனர் என்று கூறப்படும் 5 ஆயிரத்து 979 பேரில்

11

# தயிரில் புழுக்கள் பாற்சாலைக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஜூலை 05

புழுக்களுடன்கூடிய தயிரை விற்பனை செய்த பாற்சாலையை சீல் வைத்து மூட உத்தரவிட்ட யாழ். நீதிவான் நீதிமன்றம் உரிய நிறுவனத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இயங்கும் பாற்சாலையை இவ்வாறு சட்ட நடவடிக்கைக்கு உள்ளானது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணம் மாநகரில் இயங்கும் பாற்சாலை ஒன்றில் விற்பனையாகும் பால் மற்றும் பால் பொருட்கள் தரமற்றவையாக உள்ளதுடன், அங்கு பெரும் சுகாதார சீர்கேடும் நிலவுவதாக மக்கள் உரிய சுகாதார பரிசோதகரிடம் முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

இதற்கமைய, சுகாதார பரிசோதகர்களான

11

# சம்பந்தனின் இறுதிக்கிரியை அண்ணாமலை பங்கேற்பார்!

## ஸ்டாலினும் பங்கேற்க வாய்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 05

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் இறுதிக்கிரியையில் இந்தியாவை ஆளும் கட்சியான பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவரான அண்ணாமலை பங்கேற்கவுள்ளார். தனது பங்கேற்பை அண்ணாமலையே தன்னிடம் உறுதிப்படுத்தினார் என்று சி. சிறீதரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்கும் வாய்ப்பு உள்ளபோதும் அதுதொடர்பில் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை என்றும்

11

# குடத்தனை சுற்றிவளைப்பில் 6 சந்தேகநபர்கள் நேற்று கைது

வடமராட்சி, ஜூலை 05

வடமராட்சி கிழக்கு - குடத்தனையில் நேற்று அதிகாலை நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மருதங்கேணி பொலிஸார், இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இவர்கள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர். கைதான அனைவரும் வாள்வெட்டு மற்றும் கொள்ளை, வழிப்பறி, கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களை தடுத்து வைத்து விசாரித்து வரும் மருதங்கேணி பொலிஸார் அவர்களை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

இந்த ஊர்க்குருவி யாழ்ப்பாணம் "ஈழநாடு"வில் இந்தப் பத்தியை எழுதத் தொடங்கிய காலம் அது. ஒருநாள் வயது முதிர்ந்த அரசியல்வாதி ஒருவரைப் பற்றி அதில் எழுதிய போது, அதனைப் படித்துவிட்டு ஒரு சட்டத்தரணி தொடர்பு கொண்டு பேசினார்.

மூத்த சட்டத்தரணியான அவர், அப்போது யாழ்ப்பாண பிரஜைகள் குழுவின் தலைவராகவும் இருந்து யாழ்ப்பாணத்தில் நடக்கும் மனித உரிமைகள் மீறல் - சட்டத்துக்குப் புறம்பான விடயங்கள் குறித்து குரல் கொடுத்து வந்தவர்.

அவரின் ஆதங்கம், அந்த வயதுமுதிர்ந்த அரசியல்வாதி சொன்ன ஒரு விடயத்தைப் பற்றி எழுதியபோது, "இது என்ன அறளைபேர்ந்த கதையா?" என்று ஊர்க்குருவி எழுதியிருந்ததுதான் அவருக்குக் கோபத்தை உண்டாக்கியிருந்தது. இத்தனைக்கும் அவருக்கும் அந்த அரசியல்வாதிக்கும் ஒத்துவராது என்பதும் எனக்குத் தெரிந்திருந்தது.

ஆனால், அவருக்கு அது வல்ல முக்கியம், ஒருவரின் வயோதிபத்தை அப்படி விமர்சிப்பது அவரின் மனித உரிமையை மீறும் செயல் அல்லவா என்றே அவர் கோபப்பட்டார்.

அந்தச் செய்தியைப் படித்த போது எனக்கு இந்தச் சம்பவம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் அரசு கட்சியின் தலைமை அலுவலகத்தில் மறைந்த தலைவர் இரா. சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு வெளியே வந்த அதன் இன்றைய தலைவர் மாவை சேனாதிராசாவிடம் ஊடகவியலாளர்கள் சம்பந்தனின் இடத்துக்கு புதிய எம். பி. நியமனம் தொடர்பாகக் கேட்ட கேள்விக்கு பதிலளித்த மாவையின் செய்தி நேற்றைய ஈழநாடுவில் வெளிவந்திருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

"திருகோணமலை மாவட்டத்தின் அடுத்த பாராளுமன்ற உறுப்பினராக குகதாசன் நியமிக்கப்படவுள்ளார். அவரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைவராகத் தெரிவு செய்வதற்கு மத்திய செயல் குழு தீர்மானித்திருக்கின்றது.

மறைந்த தலைவர் இரா. சம்பந்தனின் இறுதிக்கிரியையின் பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மத்திய செயல் குழு ஒன்றுகூடி குறித்த வெற்றிடத்துக்கு குகதாசனை நியமிக்கத் தீர்மானித்துள்ளோம். இரா. சம்பந்தனுக்கு அடுத்தபடியாக கூடுதல் வாக்குகளை குகதாசன் பெற்றமையால் அவரை நியமிப்பது என்று மத்திய குழு தீர்மானம் எடுக்கும் என நம்புகின்றேன்"

இதுதான் மாவை அண்ணர் சொன்ன செய்தி.

பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஓர் எம். பியின் இடம் காலியானால், அந்தத் தேர்தலில் விருப்பு வாக்குப் பட்டியலில் அவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் ஒருவரை தேர்தல் திணைக்களமே நியமிக்கும். அதற்கு யாரிடம் கேட்க வேண்டும் என்பதும் தேவையற்றது. அதிகம் ஏன் கட்சியின் மத்திய குழு வேறு ஒருவரை நியமிக்க விரும்பினாலும் அது சட்டப்படி சாத்தியமற்றது. அதுவே, தேசியப் பட்டியல் எம்.பி. ஆனால் மாத்திரமே அடுத்தவரை கட்சி நியமிக்கலாம்.

இந்தச் சங்கதியெல்லாம் தெரியாதவரல்ல மாவை சேனாதிராசா. அப்படியிருக்க அவர் ஏன் மேற்கண்டவாறு கூறினார் என்று பலரும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

எம். பி. பதவிக்கான நியமனத்தை மாத்திரம் அவர் குறிப்பிட்டிருந்தாலும் பரவாயில்லை. கூடவே, அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் குகதாசனையே நியமிக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எப்போதோ இல்லாமல் போய்விட்ட ஒன்று. அதிலிருந்து தமிழ் அரசு வெளியேறிய பின்னர், மிகுதியாக இருந்த பங்காளிக் கட்சிகள் மேலும் மூன்று கட்சிகளுடன் அமைத்த கூட்டே இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று சொல்லும் உரிமையுள்ளது. அவர்களும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற பெயரில் இயங்குகின்றனர். இந்த நிலையில் இல்லாத ஒரு கூட்டமைப்புக்கு மாவை தலைவர் நியமனம் செய்திருக்கிறார் என்று பலரும் அவரை சமூகவலைத்தளங்களில் வறுத்தெடுத்து வருகின்றனர்.

ஆனால், சம்பந்தன் அமரத்துவம் அடைந்ததும் அவரின் அரசியல் சிஷ்யன் சுமந்திரன் வெளியிட்ட சிறிய குறிப்பிலும் அவரை கூட்டமைப்பின் தலைவராகவே குறிப்பிட்டிருந்தார். அவர் அப்படி அறிவித்தபோது கண்டுகொள்ளாத பலரும் மாவையின் அறிவிப்பைப் பார்த்து கருத்து சொல்லி வருகின்றனர்.

சிலவேளை தனக்கு முன்னர் சம்பந்தன் ஐயாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் என்று குறிப்பிடாமல் தலைவர் என்று குறிப்பிட்டதை சுட்டிக்காட்டுவதற்காகவும் தனது தவறின் மூலம் முதலும் இதுபோன்று தவறாக குறிப்பிட்டவரைப் பற்றி மீண்டும் மக்களைப் பேச வைப்பதற்காக அவர் இப்படியொரு செய்தியைச் சொன்னாரோ தெரியவில்லையே.!

- ஊர்க்குருவி.

# கடன் சீரமைப்பு நடவடிக்கையால் வலுசக்தி துறை பலப்படுத்தப்படும்!

## இராஜாங்க அமைச்சர் இந்திக்க



கொழும்பு, ஜூலை 05

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றியால் கடந்த நெருக்கடியின்போது முடங்கிக் கிடந்த வலுசக்தி துறை தொடர்பான திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும். மின்சார நெருக்கடியைத் தீர்க்க இது பெரும் உதவியாக அமையும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயல் திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சியில் உள்ள சில தரப்பினர் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் சாடினார்.

நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்தகால நெருக்கடி நிலையின்போது வலுசக்தி துறை தொடர்பான பல திட்டங்கள் முடங்கின. ஆனால், தற்போது இரு தரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

எனவே, வெளிநாடுகளில் இருந்து கடன் பெற்று ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்ட இந்த திட்டங்களை, மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான சட்ட ரீதியிலான நிலைமைகள் நிறைவடைந்துள்ளன. இதன்படி, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றி, நாட்டில் நிலவும் வலுசக்தி நெருக்கடியை தீர்க்க பெரும் உதவியாக இருக்கும் என்பதைக் கூற வேண்டும்.

மேலும், மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சக்தி அமைச்சு ஆகியவை கூரையின் மீது பொருத்தப்படும் சூரிய சக்தி கட்டமைப்பு மூலம் மின்சார உற்பத்திக்கான செலவு குறித்து பொருத்தமான கணக்கீடுகளை செய்துள்ளன. இதன்படி, கட்டணங்களை குறைக்க முடிந்துள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, குறைந்த விலையில் மின்சாரம் கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு விண்ணப்பிக்க முடிந்தது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மின்சார சபை நட்டமின்றி செயல்படும் நிலையை ஏற்படுத்த முடிந்துள்ளது - என்றார். (ஐ)

# சாவகச்சேரி மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

தென்மராட்சி, ஜூலை 05

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை அத்தியட்சகரை மாற்றம் செய்ய வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த மருத்துவ அத்தியட்சகர் மனிதாபிமானமின்றியும் தான்தோன்றித்தனமாகவும் நடக்கிறார் என்றும் வாய்மொழி துன்புறுத்தல்களை மேற்கொள்கிறார் என்றும் குற்றச்சாட்டுகளை மருத்துவர்கள் முன்வைத்தனர்.

எனினும், மருத்துவர்களின் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சுகாதார உத்தியோகத்தர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். மருத்துவமனையை சிறந்த சேவை வழங்கும் நிறுவனமாக மாற்றுவதற்கு பொறுப்பு மருத்துவ அதிகாரி முயற்சிக்கும்போது, அதற்கு மருத்துவர்கள் ஒத்துழைக்க மறுத்து வருகின்றனர். இதுவே, பணிப்புறக்கணிப்புக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழ். மாவட்ட பதில் அரச அதிபராக பிரதீபன் நேற்று பொறுப்பேற்றார்!

யாழ்ப்பாணம், ஜூலை 05

யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் நேற்று வியாழக்கிழமை தனது பதவியை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



இந்த நிகழ்வு நேற்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் வரவேற்கப்பட்டு, பொன்னாடை போர்த்தப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, அவர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் காணி எஸ். சிறீமோகன் மற்றும் மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# 'இருட்டின் காதலி' கவிதை நூல் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஜூலை 05

காயத்ரியின் "இருட்டின் காதலி" கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல. 24, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்துக் கல்லூரி (முன்பாக) நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ. த. ஜெயசீலன், கருத்துரையை அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர் ம. அரவிந்தன், கவிதை வாசிப்பை செ. ராகவேந்தன், நூல் அறிமுக உரையை ஆசிரியர் சிறீலேகா பேரின் பகுமார், நூல் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ச. முகுந்தன் ஆகியோர் ஆற்றுவர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.07.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வாக்கு அரசியலில் அறிவின் பங்கு

ஜனநாயகம் தொடர்பில் பலவாறான விமர்சனங்கள் உண்டு. எனினும், அரசியலில் மக்கள் பங்குபற்றுவதற்கு வேறு எந்தவொரு தெரிவும் இல்லை. ஆனால், ஜனநாயகத்தில் மக்களின் அரசியல் பங்குபற்றலுக்கும் - அரசியல் சிந்தனைகளுக்கும் ஏதாவது தொடர்பிருக்கின்றதா? இதற்கு வேறு எந்தவொரு நாட்டை உதாரணம் காண்பித்தாலும் அது பொருத்தமாக இருக்காது. அமெரிக்காவை சுட்டிக்காட்டுவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

உலக ஜனநாயகத்தின் இன்னொரு முகம்தான் அமெரிக்கா. அந்தளவுக்குத் தனிமனித சுதந்திரத்தைக் கொண்டாடும் நாடு. உலகில் இப்போதும் ஜனநாயக அரசியல் பாரம்பரியத்தை பாதுகாப்பதில் அமெரிக்காவுக்கே முதன்மையான பங்கு உண்டு. அமெரிக்காவின் வெளிவிவகார அணுகுமுறை அது தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் அமெரிக்காவுக்கு உள்ளேயே அதிகம் உண்டு. அமெரிக்கா தொடர்பான விமர்சனங்கள் அமெரிக்காவுக்கு உள்ளிருந்து வருவது தான் அதிகம். அந்தளவுக்கு அமெரிக்கா ஜனநாயகத்தை போற்றுகின்றது. ஆனால், அதுவே ஒரு சவலாகவும் இருக்கின்றது.

இந்த ஆண்டு அமெரிக்க மக்கள் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யவுள்ளனர். அமெரிக்காவின் இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்று தான் ஆட்சிக்கு வரும். ஜனநாயகம் என்னும் பெயரில் அங்கு அதிக கட்சிகள் இல்லை. நமது தமிழ் சூழலில் இருப்பது போன்று இரண்டு பேர் சேர்ந்துவிட்டால் ஒரு கட்சியை உருவாக்கிவிடலாம் என்றவாறு அங்கு எவருமே கட்சி கட்டுவதில்லை.

குடியரசு கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகியவைகளே அமெரிக்காவின் அதிகாரத்தை மாறிமாறி கைப்பற்றும் கட்சிகளாகும். அண்மையில், குடியரசு கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜனநாயக கட்சியின் வேட்பளாரும் தற்போதைய ஜனாதிபதியுமான பைடன் ஆகியோர் பகிரங்க விவாதத்தில் பங்குகொண்டனர். பைடன் உடல் ரீதியாக அதிகம் தளர்வடைந்துவிட்டார். அவரின் பேச்சு அதனைக் காட்டிக்கொடுத்தது. ஆனால், ட்ரம்ப் திடகாத்திரமாக இருக்கின்றார்.

அவர் அவரின் பாணியில் பேசியிருந்தார். ட்ரம்ப் தொடர்பில் அமெரிக்காவில் ஏராளமான குற்றச்சாட்டுகள் உண்டு. அவரின் பேச்சு மற்றும் செயல் பலராலும் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது. அவர் தொடர்ந்து பொய்களையே கூறிவருகிறார் என்று அமெரிக்கா அவதானிகள் கூறுகின்றனர். ஆனால், பல கோடிக்கணக்கான அமெரிக்க வெள்ளையின மக்கள் ட்ரம்பின் கதையையே நம்புகின்றனர் - இரசிக்கின்றனர். அவர், கூறினால் வீதிகளில் இறங்கி வன்முறைகளில் ஈடுபடுவதற்கு தயாராக இருக்கின்றனர். அமெரிக்க மக்கள் படித்தவர்கள் - ஒப்பீட்டு அடிப்படையில் எங்களை விடவும் அதிகம் முன்னேறியவர்கள். ஆனால், அப்படியான மக்கள் அரசியலில் எவ்வாறு சிந்திக்கின்றனர்? அறிவு ரீதியாகவா அல்லது உணர்வுபூர்வமாகவா?

முட்டாள்தனமான - அறிவுக்கு எந்த வகையிலும் பொருத்தமற்ற விடயங்களைக்கூட தாங்கள் நம்பும் ஒருவர் கூறினால் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள - ரசிக்கத் தயாராக இருக்கின்றனர். அவ்வாறாயின், அரசியலில் உண்மைபேச வேண்டும் - நேர்மையாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பவரின் நிலைமை என்ன? மக்கள் ஒன்றை - ஒருவரை நம்பிவிட்டால் அதன் பின்னர் சிந்திப்பதை நிறுத்திவிடுகின்றனர். அந்த ஒருவர் உண்மையானவராகவும் இருக்கலாம் - பொய்யராகவும் இருக்கலாம். தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் சிந்திப்பவர்களும் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். மக்கள் இரசிக்கக்கூடிய ஒருவர், மக்கள் முன்னால் இருந்தால் - அவர் கூறுவதை நம்பி அவருக்கு பின்னால் மக்கள் திரள்வார்கள். இங்கு தேசம் - தேசியம் என்பதெல்லாம் இரண்டாவது - மூன்றாவது விடயங்கள்தான்.

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்த மோ. சைக்கிள் அணி உருவாக்கம்

*யாழ்ப்பாணம், ஜூலை 05*

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த மோட்டார் சைக்கிள் அணி நேற்று வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யுக்திய சுற்றிவளைப்பு மற்றும் குற்றங்களை தடுக்கும் வகையிலேயே இந்த மோட்டார் சைக்கிள் அணி அமைக்கப்பட்டுள்ளது.



காங்கேசன்துறை, தெல்லிப்பழை, நெல்லியடி, பருத்தித்துறை, இளவாலை, மருதங்கேணி, பலாலி, அச்சுவேலி, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுகளில் குற்றச்செயல்களை தடுக்க இந்த அணி பயன்படுத்தப்படும்.

காங்கேசன்துறை பிராந்திய பொறுப்பதிகாரி சந்தன கமகே, காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்தன ஜெயதிலக, காங்கேசந்துறை பிராந்திய பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-01)

## முல்லைத்தீவில் சுற்றிவளைப்பு 7 சந்தேகநபர்கள் நேற்று கைது

*முல்லைத்தீவு, ஜூலை 05*

முல்லைத்தீவில் நடத்தப்பட்ட "யுக்திய" சுற்றிவளைப்பில் பல குற்றங்களுடன் தொடர்புபட்ட 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு 9ஆம், 10ஆம் வட்டார பகுதிகளில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். பி. ஆர். ஹேரத் தலைமையில் பொலிஸார், இராணுவத்துடன் இணைந்து நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இந்த சுற்றிவளைப்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர்கள் இருவர், பொலிஸாரால் ஒரு நாள் பிணையில் விடுவிக்கப்பட்ட 3 பேர், திருகோணமலையை சேர்ந்த பல குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் என 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து 43 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.


கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பேரன் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

*கொழும்பு, ஜூலை 05*

இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பேரன் பிரதீப் ஜெயவர்த்தன சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார்.

நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த பிரதீப் ஜெயவர்த்தன அந்தக் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளர்.



2015 ஆம் ஆண்டு சிறீ லங்கா சுதந்திர கட்சி ஊடாக கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலில் பிரவேசித்த பிரதீப், 2017 இல் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவானார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 05 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 21
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அமாவாசை




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புது அத்தியாயம் தொடங்கும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். அலைக்கழிக்கப்படுவீர்கள். வளைந்து கொடுத்து செல்ல வேண்டிய நாள்.

**மிதுனம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் கை கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும்.பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். மதிப்பு மரியாதை கூடும்.

**சிம்மம்**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் கை கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும்.ப வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள்ஆவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். மதிப்பு மரியாதை கூடும்.

**துலாம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும்.விலகி நின்ற உறவுகள் விரும்பி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். வேலைகளை உடனடியாக முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**கும்பம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். உழைப்பால் உயரும்.

**மீனம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

# குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக சட்டத்தரணிகள் கண்டனப் பேரணி

மதுரை, ஜூலை 05

மத்திய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக மதுரையில் சட்டத்தரணிகள் எதிர்ப்பு பேரணி நடத்தினர். உயர் நீதிமன்ற மதுரை கிளை சட்டத்தரணிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர். இந்த நிலையில் மதுரை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் மத்திய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக ஜூலை முதலாம் திகதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக மாவட்ட நீதிமன்றம் முன்பு தொடங்கிய பேரணி தல்லாகுளம் வரை நடைபெற்றது. (எ)



## மதுபான கொள்கையை அரசு மறு ஆய்வு செய்ய வேண்டும்

### உயர் நீதிமன்றம் அறிவுறுத்தல்

மதுரை, ஜூலை 05

தமிழக மக்கள், இளைஞர்கள் நலன் கருதி மதுபான கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு உயர் நீதிமன்ற மதுரை கிளை அறிவுறுத்தியுள்ளது.

திருச்சி உறையூர் மீன் சந்தை அருகே மதுபான கூடத்துடன் மனமகிழ் மன்றம் திறக்கத் தடை விதிக்கக்கோரி பொதுநல மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த போது, தமிழகத்தில் குடியிருப்பு பகுதிகளில் மிகவும் நெருக்கமாக இருக்கும் அரசு மதுபான கடைகளால் பெண்கள், மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, மதுபான கொள்கையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

## 'நீட்' பரீட்சையை எதிர்க்கும் கட்சிகள் கூட்டத்தில் விஜய்

### தமிழக பா. ஜ. க. விமர்சனம்

சென்னை, ஜூலை 05

மாணவர்கள் வரவேற்கும் "நீட்" பரீட்சையை அரசியல் இலாபத்துக்காக எதிர்க்கும் கட்சிகளின் கூட்டத்தில் நடிகர் விஜய் சேர்ந்திருக்கிறார் என தமிழக பா. ஜ. க. துணைத் தலைவர் கரு. நாகராஜன் விமர்சித்துள்ளார்.

மருத்துவம் படிக்க முன்வரும் மாணவர்கள் "நீட்" பரீட்சையை எழுத வேண்டும் என்ற கொள்கை முடிவை எடுத்து அதை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது காங்கிரஸ் - தி. மு. க. கூட்டணி அரசு. இவ்வாறு "நீட்" பரீட்சையை கொண்டு வந்தவர்களே "நீட்" பரீட்சையை எதிர்த்து சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுவதும், அதை விஜய் ஆதரிக்கிறேன் என்பதும் வேடிக்கையானது- என்றார் கரு. நாகராஜன். (எ)



## பெண்களிடம் வேண்டுகோள்



விழுப்புரம், ஜூலை 05

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பா. ம. க. வேட்பாளர் வெற்றி பெற பெண்களாகிய உங்கள் செல்வாக்கை காட்ட வேண்டும் என்று பிரசாரக் கூட்டத்தில் பசுமைத்தாயகம் தலைவி சௌமியா அன்புமணி வலியுறுத்தினார்.

குத்தாம் பூண்டி, மூங்கில் பட்டு ஆகிய கிராமங்களில் பா. ம. க. வேட்பாளர் சி. அன்புமணியை ஆதரித்து பிரசாரம் செய்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## தமிழக விளையாட்டு வீரர்களுக்கு அரசு பணி



சென்னை, ஜூலை 05

தமிழக அரசுப் பணியில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பில் அமைச்சர் உதயநிதி ஆலோசனை நடத்தினார்.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் டி. ஆர். பி. ராஜா, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் சார்பில் பங்கேற்று வெற்றி பெற்ற 100 வீரர்கள், வீராங்கனைகளுக்கு 3 சதவீத விளையாட்டு இட ஒதுக்கீட்டின்கீழ் அரசுப் பணி வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் உதயநிதி அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு தொடர்பாகவே ஆலோசனை நடத்தப்பட்டது. (எ)

## வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்த முதல்வர் ஸ்டாலின்



சென்னை, ஜூலை 05

சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் வெளியிட்ட அறிவிப்புகள் மூலம் தமிழகத்தின் முன்னேற்றத்துக்கும், இளைஞர்களின் அரசு வேலை வாய்ப்புக்கும் முதல்வர் மு. க. ஸ்டாலின் வழிவகை செய்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர்கூடம், இலங்கை தமிழ் அரசு கட்சி தலைமை பணிமனையில் நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது...!

# சம்பந்தனின் உடலுக்கு வடக்கு ஆளுநர் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூலை 05

மறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இரா. சம்பந்தனின் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இதன் போதே, ஆளுநர் சார்ள்ஸ் சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தி மரியாதை அளித்தார்.

அத்துடன், சம்பந்தனின் உறவினர்களுடன் ஆளுநர் தனது அனுதாபங்களையும் பகிர்ந்து கொண்டார்.

(ஐ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூலை 05

அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து தொலைத் தொடர்பு கம்பத்துடன் மோதியதில் 19வயது இளைஞர் உயிரிழந்தார்.

கம்பஹா - படல்கம பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரூ. 1,700 சம்பள விவகாரம்:

# வர்த்தமானிக்கு இடைக்கால தடை விதித்தது உயர்நீதிமன்று

கொழும்பு, ஜூலை 05

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாயாக அதிகரிப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவை நேற்று வியாழக் கிழமை உயர் நீதிமன்றம் பிறப்பித்தது.

பெருந்தோட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயமே இந்த இடைக்கால தடை உத்தரவை விதித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளம் 1,700 ரூபாயாக அதிகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தி கடந்த மே 21ஆம் திகதியிடப்பட்ட 2385/14 எனும் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி, தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாள் சம்பளம் 1,350 ரூபாய், உற்பத்தித்திறன் அடிப்படையில் நாளாந்த விசேட கொடுப்பனவு 350 ரூபாய் என 1,700 ரூபாய் வழங்கப்படவேண்டும்.

# கிளிநொச்சி பதில் அரச அதிபராக முரளிதரன் நேற்று பொறுப்பேற்றார்



கிளிநொச்சி, ஜூலை 05

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபராக எஸ். முரளிதரன் நேற்று வியாழக் கிழமை மாவட்ட செயலகத்தில் தனது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்த எஸ். முரளி தரன், முன்னாள் அரசாங்க அதிபரான றூபவதி கேதீஸ் வரன் ஓய்வு பெற்றமையை அடுத்து கடந்த மார்ச் 15ஆம் திகதி முதல் கடமை நிறைவேற்று அரசாங்க அதிபராக பணியாற்றி வந்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கடமை நிறைவேற்றதிகார அரச அதிபர்களை பதில் அரச அதிபர்களாக நிய மிக்க அமைச்சரவை அண்மையில் அனுமதி அளித்தது. இதையடுத்து, பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் அவர்களை பதில் அரச அதிபர்களாக நியமித்தனர்.

இதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் முரளிதரன் நேற்று தனது பதவியை பொறுப்பேற்றார்.

சிவசித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்ட முரளிதரன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலர் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை எதிர்கொள்வதற்கு முதுகெலும்பற்ற எதிர்க்கட்சிகள்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சாடல்



கொழும்பு, ஜூலை 05

**ஜனாதிபதி தேர்தலையோ அல்லது வேறு எந்த தேர்தலையோ ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

தேர்தலை சந்திக்க முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சிகள் தேர்தலை ஒத்திவைப்பது பற்றி பேசினாலும் அரசாங்கம் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே பாரிஸ் மாநாட்டில் நாட்டின் கடனை மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் நாடும் மக்களும் எதிர்பார்க்கும் பொருளாதார, அரசியல், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை தற்போதைய ஜனாதிபதியால் மட்டுமே மேற்கொள்ள முடியும். எனவே, அவரை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக நியமிப்பதன் மூலம், அடுத்த ஐந்து வருடங்களுக்குள், உலகின் பலமான பொருளாதாரம் கொண்ட நாடாக இலங்கையை உருவாக்க முடியும்.

தற்போது ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஒரு கதை வெளியாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கோ அல்லது எமக்கோ விருப்பமோ தேவையோ இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். அது நிரந்தரமானது. தேர்தலை சந்திக்க முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சிகள் தேர்தலை ஒத்திவைப்பது பற்றி பேசுகின்றன. நாட்டுக்கு ஒரு சவால் வந்தபோது அதனை எதிர்கொள்ளும் பலமான முதுகெலும்பு ஜனாதிபதிக்கு மட்டுமே இருந்தது. ஐக்கிய மக்கள் சக்தியும் திசைகாட்டியும் விசித்திரக் கதைகளைச் சொல்கின்றன. அதற்கு மக்கள் ஏமாற மாட்டார்கள். மக்கள் விடுதலை முன்னணி, திசைகாட்டி என்ற பெயரில் மாறுவேடத்தில் வந்துள்ளது. ஆனால் அவர்களின் இரத்த வரலாற்றை யாராலும் அழிக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவரும் அனுரகுமார அவர்களும் மரண வீடுகளில் தனிமையைப் போக்குவதற்குத்தான் பொருத்தமானவர்கள். அதனால் அந்த இருவரையும் அந்த வேலைக்கு வைத்துக் கொள்வோம். நாட்டைக் கட்டியெழுப்பிய ரணிலிடம் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலையை ஒப்படையுங்கள்.

மொட்டுக் கட்சி ஒரு ஜனரஞ்சகக் கட்சி. நாட்டை ஒருங்கிணைத்த ஜனரஞ்சகத் தலைவர் மகிந்த ராஜபக்ச எமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை சரியான நேரத்தில் நாட்டுக்கு தெரிவிப்பார். எங்களிடம் ஒரு வெற்றி வேட்பாளர் இருக்கிறார். நாங்கள் வெற்றிப் பக்கம் இருக்கிறோம். அதனால் தான், சந்திகளிலும், வீதியோரங்களிலும் "நான்தான் மொட்டின் வேட்பாளர்" என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதைக் கணக்கெடுக்காதீர்கள்-என்றார். (அ)

# சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களால் சிறுநீரக நோய் ஏற்படும் ஆபத்து அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 05

சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களை பயன்படுத்துவதால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை விட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேசிய வைத்தியசாலையின் தோல் சிகிச்சை நிபுணர் வைத்தியர் இந்திரா கஹவிட்ட இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக சுகாதார ஸ்தாபனமும் இலங்கை சுகாதார அமைச்சுக்கும் இடையில் முகத்தை வெண்மையாக்கும் கிறீம்களில் பாதரசத்தின் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு கூட்டு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் நோக்கம் பாதரசத்தின் பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்பதாகும்.

பாதிப்பை ஏற்படுத்தும் பாதரசம் கலந்த கிறீம்கள் உடல் முழுவதும் பயன்டுத்தப்படுகின்றன. இது ஆபத்தானது. பாதரச நச்சால் சிறுநீரக செயலிழப்பு ஏற்படும்.

24 மணி நேரத்தில், நான் கிட்டத்தட்ட 60 நோயாளிகளை பரிசோதித்தேன். அதில் 10 வீதமானோர் வெண்மையாக்கும் கிறீம்களினால் ஏற்படும் பிரச்னைகளுடன் வந்தனர். இவை நீண்ட காலமல்ல, குறுகிய கால பிரச்னை. இப்போது நான் சில விஷயங்களைப் பார்க்கிறேன். உதாரணத்திற்கு, உள்ளங்கைகளின் உள்ளங்கால் கறப்பு நிறமாக மாறுகிறது. அனைத்திற்கும் பொதுவான காரணி வெள்ளையாக்கும் கிறீம்கள் ஆகும். மேலும், நகங்கள் பழுப்பு நிறமாக, இளஞ்சிவப்பு நிறமாக மாறும். இவை முன்பை விட அதிகமாக காணப்படுகின்றன. குறுகிய கால பக்க விளைவுகள் அதிகரித்து வருகின்றன. புற்றுநோய்க்கு முன் சிறுநீரகங்கள் மோசமடைந்து உயிர் சேதமும் ஏற்படுகிறது-என்றார். (அ)

# சுகாதாரப் பரிசோதகரின் கொலையுடன் தொடர்புள்ள பிரதான சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜூலை 05

இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளரான ரொஷான் குமாரவின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இரண்டு துப்பாக்கிகளுடன் கல்கிஸை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளரான ரொஷான் குமார கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி எல்பிட்டிய, பத்திராஜ மாவத்தை பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொலைக் குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூலை 05

மருதங்கேணி பகுதியில் தீயில் எரிந்து மரணமான சரவணபவானந்தம் சிவகுமார் மரணம் தொடர்பில் பெண் ஒருவர் நேற்று சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 20 திகதி தனது வத்திராயனில் வீடு ஒன்றில் இரவு வேளை தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் அவர் ஓலமிட்டபோது மக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

இந்நிலையில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தின் பெயரில் பெண் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் மணியிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் மருதங்கேணி பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தீக்காயங்களுக்கு உள்ளாகி மரணமான 44 வயதுடைய சரவணபவானந்தம் சிவகுமார் மூன்று பிள்ளைகள் தந்தை ஆவார். (அ)

# கடன் மறுசீரமைப்பு நிபந்தனைகளுக்கு இலங்கை - கடன் வழங்குநர்கள் இணக்கம்

கொழும்பு, ஜூலை 05

கடன் மறுசீரமைப்பு நிபந்தனைகளை இலங்கையும் பிணைமுறி உரிமையாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாக லண்டன் பங்குச்சந்தை ஆவணமொன்று வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை அதன் சர்வதேச இறையாண்மை முறிகள் தொடர்பில், பிணைமுறி உரிமையாளர்கள் குழுவொன்றுடன் ஜூன் 21ஆம் திகதி முதல் ஜூலை 2ஆம் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக அறிவித்துள்ளது.

இந்த குழு, இலங்கையின் 50 வீதமான சர்வதேச இறையாண்மை முறிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதானமான பிணைமுறி உரிமையாளர்களை உள்ளடக்கியுள்ளது.

சர்வதேச இறையாண்மை முறிகளை மறுசீரமைப்பதற்கான இணைந்த நிதியியல் நிபந்தனைகளுக்கும் பிணைமுறிகளை நிர்வகிப்பதை உள்ளடக்கிய இணைந்த செயற்றிட்டத்திற்கும் இந்த கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடன் உறுதிப்பாட்டுடன் தொடர்புடைய ஸ்திரத்தன்மைக்காக, இலங்கையின் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்கள் குழுவும் சர்வதேச நாணய நிதிய ஊழியர்களும் இந்த செயற்றிட்டத்தை உறுதிப்படுத்த வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த இணைந்த செயற்றிட்டத்தின் கீழ், தற்போதுள்ள பிணைமுறி தொகையில் 28 வீதத்தை குறைப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை, 12 பில்லியன் டொலர் பிணைமுறிகளை மறுசீரமைப்பதற்கான நிபந்தனைகளுடன் இலங்கையும் கடன் வழங்குநர்களும் இணங்கியுள்ளதாக புளூம்பேர்க் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது இலங்கை வங்குரோத்து அடைந்து 2 வருடங்களுக்கு பின்னர், கடன் மறுசீரமைப்பின் இறுதிக் கட்டத்திற்கு அதனை கொண்டுசென்றுள்ளதாக அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார செயற்றிறன்கள் மற்றும் செயற்பாட்டு பொறிமுறை ஆகியவற்றை உள்ளடக்கிய செயற்றிட்டத்திற்கான உடன்படிக்கைக்கு இலங்கையும் பிணைமுறி உரிமையாளர்களும் இணங்கியுள்ளதாகவும் புளூம்பேர்க் தெரிவித்துள்ளது.

# பல்கலைகளுக்கு விண்ணப்பிக்கும் காலம் இன்றுடன் நிறைவடைகிறது!

கொழும்பு, ஜூலை 05

2023ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் காலம் இன்றுடன் நிறைவடையவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனவே உரிய காலப்பகுதிக்குள் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை இணையவழியில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

அதற்கமைய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசித்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுற்றிவளைப்புக்கு சென்ற பொலிஸார்மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 05

தலாவ - சுமுதுகம பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்புக்கு சென்ற தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு கிடைத்த தகவலின் அடிப்படையில் தலாவ சுமுதுகம பகுதியிலுள்ள வீடொன்றுக்கு சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்புக்காக பொலிஸ் அதிகாரிகள் சென்றிருந்தனர்.

இதன்போது, குறித்த வீட்டிலிருந்த மதுபான விற்பனையாளர்கள் உள்ளிட்ட சிலர், பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகள் வழங்கிய தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களும் நேற்று தம்புத்தேகம நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகா வெளியேறலாம்!

## கதவை திறந்தது சஜித் அணி

கொழும்பு, ஜூலை 05

**ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பொன்சேகா எந்நேரமும் வெளியேறலாம். அவருக்கான கதவு திறந்தே உள்ளது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

அரச தரப்பின் ஒப்பந்தத்தையே பொன்சேகா நிறைவேற்றிவருகின்றார். அவரின் நூல் வெளியீட்டு நிகழ்வைக்கூட ஜனாதிபதி செயலகமே நடத்தி இருந்தது. எனவே, அவர் தற்போது எந்த பக்கம் நிற்கின்றார் என்பது தெளிவாகின்றது.

அவர் எமது அணியில் இருந்து வெளியேறலாம். ஆதனால் பாதிப்பில்லை. ஆனால் இப்படி கட்சியை, தலைமையை தாக்கிவிட்டு விடைபெற முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.



அதேவேளை, ஆளுங்கட்சியில் உள்ள சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர். டலஸ் அழகப்பெருமவுடனும் பேச்சு நடத்தப்படுகின்றது.

எனக்கு பிரதமர் பதவி ஆசை இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை வெற்றிபெற வைப்பதே எமது நோக்கம்-என்றார். (அ)

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி பெண் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 05

யாழ்பாணத்தில் கடந்த 2ஆம் திகதி குளவிக்கொட்டுக்கு இலக்காகிய பெண்ணொருவர் நேற்று முன் தினம் புதன் கிழமை தெல்லிப்பளை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

செட்டிக்குறிச்சி பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த குணசேகரம் வரதசுரோன்மணி (வயது 67) என்ற 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் அவரது வீட்டுக்கு அருகேயுள்ள காணிக்குள் சென்று பனையோலை எடுத்த வேளை அதனுள் இருந்த கருங்குளவி அவர் மீது கொட்டியது. இந்நிலையில் அவர் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# பிள்ளையானின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்தது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 05

விடுதலைப் புலிகளுக்கு ஜே.வி.பியினர் ஆயுதம் வழங்கினர் என இராஜாங்க அமைச்சர் பிள்ளையானால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம் என்று ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

88-89 காலப்பகுதியில் புலிகளுக்கு ஜே.வி.பியினர் ஆயுதம் வழங்கினர் என இராஜாங்க அமைச்சர் பிள்ளையானால் கூறப்பட்டுள்ளதாக தெரிவித்து ஊடகவியலாளர்களால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றோம். இதற்கு பதிலளித்தும் பயன் இல்லை.

தேசிய மக்கள் சக்தியுடன் முப்படைகளில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் இணைந்து வருகின்றனர்.

அதேபோல ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களும் இணைந்து செயற்படுகின்றனர். இவ்வாறு நாட்டை பாதுகாத்த படையினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருடன் நாம் பயணிக்கின்றோம்.

ஆனால் கருணா அம்மான், பிள்ளையான் போன்றோரை இணைத்துக்கொண்டு ரணில் செயற்படுகின்றார். அவரின் ஆலோசனையின் பிரகாரம் தான் பிள்ளையான் அந்த கதையைக் கூறி இருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையானுக்கு எதிராகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி விசாரிக்கப்பட வேண்டும்.

பிள்ளையான், கருணா அம்மான் போன்றோரை இணைத்துக்கொண்டு ரணிலால் தேசிய மக்கள் சக்தியின் பயணத்தை நிறுத்த முடியாது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, கப்பல் பெறுதல் போன்ற சம்பவங்கள் தொடர்பிலும் எமது ஆட்சியில் சட்டம் உரிய வகையில் செயற்படும்-என்றார். (அ)

# மன்னார் மடு திருத்தல இடைத்தங்கல் வீடுகள் நிர்மாணத்துக்கு இந்தியாவால் மேலதிக நிதி!

கொழும்பு, ஜூலை 05

மன்னார் மடு திருத்தலத்தில் நிர்மாணிக்கப்படும் குறைந்த செலவிலான இடைத்தங்கல் வீடுகள் திட்டத்துக்கான மேலதிக கொடுப்பனவாக 100 மில்லியன் இலங்கை ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கான அம்சங்களை முறைமைப்படுத்தும் இராஜதந்திர ஆவணங்கள் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்துக்கான இந்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீடானது தற்போது 400 மில்லியன் இலங்கை ரூபாவாக உள்ளது.

இலங்கையில் பொருளாதார நிலைமைகளால் மேலெழுந்த சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களின் நிர்மாணப் பணிகளுக்கான மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள கணிசமான மாற்றங்களை கவனத்தில் கொண்டு அதற்கு ஈடு



கொடுக்கும் முகமாகவும் தற்போது நடைமுறையில் உள்ள 9 நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக நிறைவேற்றுவதனை இலக்காகக் கொண்டும் அவற்றுக்கு மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

மன்னார் மடு திருத்தலத்தின் குறைந்த செலவிலான இடைத்தங்கல் வீடுகள் நிர்மாண திட்டமும் குறித்த 9 திட்டங்களில் ஒன்றாகும்.

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் 96 இடைத்தங்கல் வீடுகள் மடு திருத்தலத்தில் நிர்மாணிக்கப்படும் நிலையில் அங்கு வருகை தரும் யாத்திரிகர்கள் அவற்றைப் பயன்படுத்தமுடியும். இத்திட்டம் தற்போது நடைமுறையில் இருக்கும் நிலையில் குறித்த இடைத்தங்கல் வீடுகள் நிர்மாணப் பணிகளின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. (அ)

# வாகனங்களைக் களவாடிய இருவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூலை 05

இரத்தினபுரி பகுதியில் ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளை திருடிய இருவரை கைது செய்துள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28,29 வயதுடைய பலாங்கொடை பகுதியை சேர்ந்த இராணுவத்தில் இருந்து இடைநடுவில் நின்றவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் ஹிங்குருகடுவ பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக சென்ற ஓட்டோவை நிறுத்தி பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும், ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தேவையான தேசிய அடையாள அட்டை, காப்புறுதி அட்டை, வாகன வருமான வரிப்பத்திரம் ஆகியவை இன்றி குறித்த முச்சக்கர வண்டியை செலுத்தியமையயினால் சந்தேகம் கொண்ட ஹிங்குருகடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் ஓட்டோவையும், அதில் சென்றவர்களையும் ஹிங்குருகடுவ பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது இரத்தினபுரி கல்லெல்ல எனும் பகுதியில் திருடப்பட்ட ஓட்டோ என தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் இரத்தினபுரி வேவல்வத்தை பொலிஸ் நிலையத்திலும் ஓட்டோ காணாமல் போனமை தொடர்பில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறியக் கிடைத்துள்ளது.

அதனைத் தொடர்ந்து வேவல்வத்தை பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திய ஹிங்குருகடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஓட்டோ திருடப்படும் போது பதிவான சி.சி.ரி.வி காணொளியை பெற்றுக் கொண்டு சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

குறித்த காணொளியில் இரு சந்தேக நபர்களில் ஒருவர் ஓட்டோவைச் செலுத்தி செல்கையில் ஓட்டோவுக்கு பின்னால் மோட்டார் சைக்கிளில் மற்றைய சந்தேக நபரும் வந்துள்ளார். பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் யாருடையது என விசாரித்தபோது குறித்த மோட்டார் சைக்கிள் களவான பகுதியில் திருடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இதன்போது வெவல்வத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பை ஏற்படுத்திய ஹிங்குருகடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த மோட்டார் சைக்கிள் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடம் ஒன்றுக்கு பினன்புறமாக இருப்பதாக வெவல்வத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

பின்னர் வேவல்வத்தை பொலிஸாரினால் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இருப்பினும் போதைப்பொருள், திருட்டு, மருந்தகம் உடைப்பு ஆகிய 14 குற்றச் செயல்களுடன் இரு சந்தேக நபர்களும் தொடர்புடையவர் கள் என ஆரம்பகட்ட விசார ணைகளில் தெரியவந்துள்ள தாக பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (அ)

# சாய்ந்தமருது நகரசபை வழக்கு மீள ஒத்திவைப்பு

## கல்முனைக்கான தடை நீடிப்பு

சாய்ந்தமருது, ஜூலை 05

உயர் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட சாய்ந்தமருது நகர சபை தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் 24. 02. 2025 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதுவரை கல்முனை மாநகர சபைக்கான தேர்தலுக்கு இடைக்காலத் தடையும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் மனுதாரர்களான முன்னாள் பிரதேச செயலாளரும் இலங்கையின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியுமான ஏ. எல். எம். சலீம், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஏ. ஆர். எம் அஸீம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலியைக் கொன்று பாழடைந்த கிணற்றுக்குள் புதைத்த காதலன்?

## திருகோணமலையில் கொடூரம்



மூதூர், ஜூலை 05

**காதலனுடன் சென்ற 25 வயது யுவதி காணாமல்போன நிலையில் அவர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் பாழடைந்த கிணறு பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அந்தக் கிணறு இன்றைய தினம் காலை மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் தோண்டப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

திருகோணமலை சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியைச் சேர்ந்த 25 வயது இளம் யுவதியொருவர் காணாமல் போயுள்ளதாக அவரது குடும்பத்தினரால் சேருவில மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வழக்கு விசாரணையை ஆரம்பித்துள்ள மூதூர் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கிளிவெட்டியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை விசாரணை செய்ததன் அடிப்படையில், கிளிவெட்டி கிராமத்தின் எல்லைப்புறத்தில் பாழடைந்து கிடக்கும் கிணறு ஒன்றை தோண்டுவதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், அப்பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை முதல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அந்த கிணறு இன்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் தோண்டப்படவுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த இந்த யுவதியும் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அயல் கிராமமான கிளிவெட்டி கிராமத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞனும் காதலித்து வந்தமையும் விசாரணைகளில் தெரியவந்தது.

அத்துடன், கடந்த மே மாதம் யுவதி காதலனுடன் மட்டக்களப்புக்குச் சென்று வசித்து வந்ததாகவும், மே மாதம் 31 ஆம் திகதி மாலை அழுது கதைத்த குரல் பதிவொன்றை குடும்பத்தாருக்கு அனுப்பியிருந்ததாகவும், அன்றைய தினம் இரவு வீடியோ அழைப்பில் குடும்பத்தாருடன் கதைத்திருந்ததாகவும் இதன்போது வீட்டுக்கு வருவதாக தெரிவித்திருந்ததாகவும் அதன் பின்னர் அவருடன் தொடர்பில்லாமல் போயிருந்ததாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காதலனின் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்த யுவதியின் குடும்பத்தார் பல முறை முயற்சித்தபோதும், ஜூன் மாதம் 13 ஆம் திகதி அவர் அழைப்பெடுத்து, தான் வேலையில் நிற்பதாகவும் வீட்டுக்குச் சென்று அக்காவுடன் கதைக்கக் கொடுப்பதாகவும் யுவதியின் தம்பியிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

அதன் பின்னர் எந்தவித தொடர்பும் இல்லாத நிலையில், சேருவில மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் ஜூலை மாதம் முதலாம் திகதி முறைப்பாடு செய்ததாகவும் யுவதியின் குடும்பத்தினர் கூறினர்.

அத்துடன், கொலை செய்து கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என்றும் ஜே. சி. பி. இயந்திரத்தின் உதவியுடன் அருகில் இருந்த குப்பைகளைக் கொண்டு காதலனால் கிணறு மூடப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)





# ஈச்சநகர் முன்பள்ளி சிறாரின் மாதிரி ஹஜ் பெருநாள் நிகழ்வு

தம்பலகாமம், ஜூலை 05

திருகோணமலை - தம்பலகாமம் முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் முன்பள்ளி சிறார்களின் மாதிரி ஹஜ் கடமை நிறைவேற்றும் நிகழ்வு முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் முன்பள்ளி ஆசிரியர்களான அனஸ் உசாமா, றிஸ்தா, ஷர்மிளா ஆகியோரின் ஏற்பாட்டின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் முள்ளிப்பொத்தானை பள்ளிவாசல்களின் தலைவர்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இஸ்லாத்தின் இறுதிக் கடமையான ஹஜ் யாத்திரையின் போது எவ்வாறு கடமைகளை நிறைவேற்றுதல், எவ்வாறு வலம் வருதல், எவ்வாறு ஓதுதல் முதலான பல விடயங்களை இதன் மூலம் சிறார்கள் செயல்படுத்திக் காட்டினர்.

இவ்வாறு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் தமது கடமைகளைச் சரிவர செய்ய முடியும் என்பது இதன் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டதாக முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர். (எ)

# "பல்கலை. ஊழியர்களுக்கு தீர்வை வழங்க வேண்டும்"



கல்முனை, ஜூலை 05


அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளில் சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்த நமது நாட்டை, தனியாக வந்து மீட்டெடுத்து நாளுக்கு நாள் முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த 65 நாட்களுக்கு மேலாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட் டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வைத்தர முன்வரவேண்டும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம். ரி. எம். தாஜுடீன் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக முற்றலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஊழியர்கள் முன்னிலையில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வங்குரோத்தடைந்திருந்த நாட்டை மீட்ட ஜனாதிபதி, பொருளாதார ரீதியில் வங்குரோத்தடைந்திருக்கும் பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தி விரைந்து தீர்வைப் பெற்றுத்தர முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# ஆளுநரால் வழங்கப்படும் பதவிகளை ஏற்கக்கூடாது

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு



நிந்தவூர், ஜூலை 05

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கப்படவுள்ள ஒருங்கிணைப்பாளர் பதவிகளைப் பொறுப்பேற்கக் கூடாது என முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம், கட்சி உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கடந்த உள்ளூராட்சி மன்றங்களில் தவிசாளர் மற்றும் முதல்வர் பதவி வகித்த வர்கள்

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கு அமைய கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்படவுள்ள இணைப்பாளர் பதவிகளை பொறுப்பேற்க வேண்டாமென அந்தக் கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னாள் தவிசாளர்கள் மற்றும் முதல்வர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் வாகனங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இது தேர்தல் சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும். ஏனெனில் இவர்களில் பெரும்பாலான தலைவர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களாக உள்ளனர். அவர்களின் வேட்பு மனுக்கள் இன்னும் செல்லுபடியாக உள்ளது.

மறுபுறம், இது மூன்று மாதங்களுக்குள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் உங்களின் ஆதரவைப் பெறுவதற்கான இலஞ்சமாக நாங்கள் கருதுகின்றோம். இது மிகவும் தீவிரமான விடயமாகும். இதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

இந்த இணைப்பாளர் பதவிகளை நமது கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் பொறுப்பேற்கக் கூடாது என கட்சித் தலைமையால் எனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நமது கட்சியின் உறுப்பினர்களை இவ்வாறான பதவிகளைக் கொடுத்து தங்களுக்குச் சார்பாக மாற்றிக் கொள்ளப்பார்க்கின்றனர். இவ்வாறான ஜனநாயகத்துக்கு எதிரான செயல்பாட்டுக்கு எமது கட்சி ஒருபோதும் துணைபோகாது.


ஆளுநர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு உத்தரவுகளை அனுப்பி இந்த சட்டவிரோத நியமனங்களை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளேன்.

கட்சியின் தீர்மானத்தை மீறி நீங்கள் செயல்பட்டால் உங்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ- 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பைடனை விட கமலா ஹரீஸுக்கு ஆதரவு

## வெளியானது புதிய கருத்துக்கணிப்பு



வாஷிங்டன், ஜூலை 05

**ஜனாதிபதி ஜோ பைடனுக்கு உள்ளதைவிட கமலா ஹரீஸுக்கு பெண் வாக்காளர்களின் ஆதரவு கணிசமாக உள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்புக்கு எதிராக, கமலா ஹரீஸை வேட்பாளராக நிறுத்தினால் வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது என கருத்துக்கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.**

அமெரிக்காவில் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் இடையிலான முதல் நேரடி விவாத நிகழ்ச்சி கடந்த மாதம் 28 ஆம் திகதி நடந்தது. இந்த விவாதத்தின்போது ஜோ பைடன் பலமுறை பேசத் தடுமாறினார். சில நொடிகள் அப்படியே ஸ்தம்பித்து நின்றார். இந்த நிலையில் பைடன் மீண்டும் தேர்தலில் போட்டியிட வேண்டுமா? என்ற விமர்சனக் குரல்கள் எழத்தொடங்கியுள்ளன.

இதனால் பைடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதே நல்லது என்று அவரது கட்சிக்குள்ளிருப்பவர்களே பேசத் தொடங்கினர். பைடனின் தடுமாற்றம் அமெரிக்க மக்களிடையேயும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் சி. என். என். தொலைக்காட்சி புதிய கருத்துக் கணிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. இதன்படி, தற்போது அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகவுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரீஸுக்கு ஜனாதிபதி வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது.

கருத்துக் கணிப்பின்போது ட்ரம்பா?, பைடனா? என்ற கேள்விக்கு 49 சதவீதம் பேர் ட்ரம்புக்கும் 43 சதவீதம் பேர் பைடனுக்கும் ஆதரவளித்துள்ளனர். 6 சதவீத வித்தியாசத்தில் ட்ரம்ப் முன்னிலை பெற்றார். அதேசமயம் ட்ரம்பா, கமலா ஹரீஸா? என்ற கேள்விக்கு 47 சதவீத வாக்காளர்கள் ட்ரம்புக்கு ஆதரவாகவும், 45 சதவீத வாக்காளர்கள் கமலா ஹரீஸ் ஜனாதிபதி ஆகலாம் என்றும் விருப்பம் தெரிவித்துள்ளனர். ட்ரம்பை விட வெறும் 2 சதவீத வித்தியாசத்தில் மட்டுமே கமலா ஹரீஸ் உள்ளார்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்புக்கு எதிராக, கமலா ஹரீஸை வேட்பாளராக நிறுத்தினால் வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது என கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது. (எ)

# கரீபியன் நாடுகளை புரட்டிப்போட்ட புயல்

## ஜமைக்காவில் 9 பேர் பலி!



பார்படாஸ், ஜூலை 05

கரீபியன் நாடுகளைத் தாக்கிய பெரில் புயலால் ஜமைக்காவில் 9 பேர் பலியாகினர்.

அட்லாண்டிக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக புதிய புயல் சின்னம் உருவானது. இந்த புயலுக்கு "பெரில்" எனப் பெயரிடப்பட்டது. புயலின் நகர்வை தென் அமெரிக்கா, கரிபீயன் தீவு நாடுகளைச் சேர்ந்த வானிலை ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். வெனிசுலா நாட்டையொட்டி உருவான இந்தப் புயல் கரீபியன் தீவுகள் வழியாக மெக்சிக்கோவில் கரையை கடக்கும் எனக் கூறப்பட்டது.

எனவே, வெனிசுலா, கரீபியன் நாடுகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கரையோரங்களில் வசித்து வந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இதனிடையே "பெரில்" புயல் வெனிசுலா மற்றும் கரீபியன் தீவு நாடுகளில் தாக்கியது. புயல் கடந்து செல்லும் இடங்களில் எல்லாம் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

வெனிசுலா, ஜமைக்கா, பார்படாஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் சேதத்தை சந்தித்தன. இதனால் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கடற்கரையையொட்டி அமைந்திருந்த நகரங்களில் மரங்கள், மின்கம்பங்கள் உள்ளிட்டவை சாய்ந்தன. மின்சார விநியோகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளில் பாதிப்பு ஏற்பட்டதால் இலட்சக்கணக்கான பொதுமக்கள் பாதிப்படைந்தனர்.

புயலால் ஜமைக்காவில் 9 பேர் பலியாகினர். வெனிசுலாவில் 3 பேர், கிரேனடா தீவில் 3 பேர், செயின்ட் வின்செட் மற்றும் கிரேனடைன்ஸ் தீவில் ஒருவர் பலியானார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. (எ)

# விவாத மேடையில் உறங்கிவிட்டேன்!

## ஜோ பைடன் விளக்கம்

நியூயோர்க், ஜூலை 05

விவாத மேடையில் கிட்டத்தட்ட நான் உறங்கிவிட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 2024 இற்கான முதல் நேரடி விவாதத்தில் ஜோ பைடன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் பங்கேற்றனர். இந்த விவாதம் கடந்த வாரம் நடைபெற்றது. இதில் பைடன் செயல்பட்ட விதம் கடும் விமர்சனத்துக்குள்ளானது. இந்தச் சூழலில் அதற்கான விளக்கத்தை அவர் கொடுத்துள்ளார்.

"இது நான் கூறும் சாக்கு அல்ல. இது எனது விளக்கம்.




விவாதத்தில் நான் திறமையாக செயல்பட வில்லை. விவாதத்துக்கு முதல் நாள் இரவு எனக்கு சரியான உறக்கம் இல்லை. விவாத நிகழ்வுக்கு முன்பாக உலக நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டது இதற்கு காரணம். நான் எனது ஊழியர்கள் சொன்னதை கேட்கவில்லை. அத்தோடு விவாத மேடையில் கிட்டத்தட்ட நான் உறங்கிவிட்டேன்" என்றார். (எ)

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

லாகூர், ஜூலை 05

பாகிஸ்தானில் வெடிகுண்டுத் தாக்குதலில் முன்னாள் செனட் உறுப்பினர் உட்பட ஐவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் அறிக்கை தாக்கல் செய்ய கைபர் பக்துன்குவா மாகாண முதலமைச்சர் அலி அமின் உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் கைபர் பக்துன்குவா மாகாணத்தின் பஜாவர் பகுதியில் தமடோலா என்ற இடத்தில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடிக்க செய்யப்பட்டது.

முன்னாள் செனட் உறுப்பினரான இதயத்துல்லா கான், தமடோலா பகுதியில் இடைத் தேர்தலுக்கான பிரசாரத்துக்கு சென்றபோது, அவருடைய காரை இலக்காகக் கொண்டு நடந்த இந்தத் தாக்குதலில், அவர் உயிரிழந்தார். அவருடன் 4 பேர் பலியாகினர். (எ)

# தேர்தல் போட்டியிலிருந்து பைடன் விலக வேண்டும்

## ஜனநாயக கட்சியினர் போர்க்கொடி

வாஷிங்டன், ஜூலை 05

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன் விலகிக் கொள்ள வேண்டுமென ஜனநாயக கட்சியின் மூன்றில் ஒருவர் கருதுவது ரொய்ட்டர்ஸ் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான முதலாவது நேரடி விவாதத்தின் போது ஜோ பைடன் தடுமாற்றத்துடன் காணப்பட்டதைத் தொடர்ந்து அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென அந்தக் கட்சியினர் கருதுகின்றனர்.

இதேவேளை, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 40 சதவீதமானவர்கள் பைடனையும் 40 வீதமானவர்கள் ட்ரம்பினையும் ஆதரிக்கின்றனர் என கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள ரொய்ட்டர், நேரடி விவாதத்தின் பின்னர் பைடனுக்கான ஆதரவு வீழ்ச்சியடையவில்லை என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

ட்ரம்புடனான நேரடி விவாதத்தின்போது தடுமாறியதைத் தொடர்ந்து பைடன் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் முயற்சிகளை கைவிட வேண்டுமென 39 வீதமான ஜனநாயக கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பைடனுக்கு பதில் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்குத் தகுதியானவர் என ரொய்ட்டர் முன்வைத்த பெயர்களில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமாவுக்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளது. (எ)

# ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் மாநாடு சவூதி அரேபியாவில்

ரியாத், ஜூலை 05

உலகின் முதல் சர்வதேச ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் மாநாட்டை சவூதி அரேபியா நடத்த தீர்மானித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதியை உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தின மாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. ஒட்டிப்பிறந்த இரட்டையர்களின் நிலையைப் பற்றி வலியுறுத்தவும் அவர்களின் சிகிச்சை, பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு உட்பட சமூகத் தில் [illegible] ரத்தை மேம்படுத்தவும் இந்த நாள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

பஹ்ரைன், மொராக்கோ, கட்டார் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்த முயற்சியை சவூதி அரேபியா முன்மொழிந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இலங்கை-இந்தியா இடையே மிகவிரைவில் படகுச் சேவை

## நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 05

**சிறிலங்கன் எயார்லைன்ஸ் எந்த வகையிலும் விற்கப்படாது என்றும் மறுசீரமைப்பு மட்டுமே செய்யப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**



நிலையான நாட்டுக்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் 49 வீத பங்குகளை வேறு நிறுவனத்துக்கு வழங்க முடியும் எனவும், ஆனால் பொருத்தமான முதலீட்டாளர் இதுவரை முன்வரவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் பாரிய நட்டத்தை சந்தித்து வரும் மத்தள விமான நிலையத்தின் நிர்வாகம் அடுத்த சில வாரங்களுக்குள் ரஷ்ய-இந்திய கூட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

மேலும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படகுச் சேவை மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்ததாக அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 05

மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இரத்மலானையைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

மொரட்டுவை பொலிஸ் அதிவிரைவு மோட்டார் சைக்கிள் குழுவினர் நடத்திய, சோதனை நடவடிக்கையின்போது கடத்துவதற்கு தயார் நிலையில் வைத்திருந்த இந்த போதைமாத்திரைகள் மீட்கப்பட்டன.

இதன்போது 500 போதைப் பொருள் மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## யுக்திய நடவடிக்கை புதிய வடிவில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 05

யுக்திய தேடுதல் நடவடிக்கைகள் நேற்று முதல் மீண்டும் புதிய கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கைக்கு இராணுவத்தின் ஆதரவும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால்தல்துவ தெரிவித்தார்.

கொழும்பை சுற்றியுள்ள பல பிரதேசங்களில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும், எதிர்காலத்தில் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் நிஹால் தல்துவ குறிப்பிட்டார். (அ)

# ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பிணை விண்ணப்பம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 05

மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவின் பிணை மனு கோரிக்கைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை பிணையில் விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்வுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

இந்த பிணை கோரிக்கை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது. ஹிருணிக்கா பிரேமச்சந்திரவின் தரப்பில் முன்னிலையான சட்டத்திரணியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க சட்டமா அதிபர் எதிர்பார்ப்பதாக அரசாங்க சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

அத்துடன் எழுத்து மூலம் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்காக குறித்த வழக்கை ஒத்திவைக்குமாறும் அரசாங்க சட்டத்தரணி மன்றில் கோரிக்கை முன்வைத்தார்.

இதன்படி, சட்டமா அதிபருக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க அனுமதித்த உயர் நீதிமன்ற நீதிபதி, பிணை கோரிக்கையை எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறும் தெரிவித்து வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுங்கத் திணைக்கள அதிகாரிகள் சங்கம் நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 05

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் சில நாடாளாவிய ரீதியில் நேற்று பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளன.

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தங்களது கோரிக்கைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பல்வேறு தடவைகள் தெரிவித்திருந்தபோதிலும் இது வரை தீர்வு முன்வைக்கப்படவில்லை என சுங்க அதிகாரிகள் சங்கத்தினர் கூறினர்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றும் இன்றும் சுகயீன விடுமுறைப் போராட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானம் மேற்கொண்டதாக சுங்க அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

சுங்கக் கட்டளை சட்டத்தின் பல பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என சுங்க அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகளிடம் பல்வேறு தடவைகள் பேச்சு நடத்தியபோதிலும் உரிய தீர்வு முன்வைக்கப்படாத காரணத்தினால் சுங்க அதிகாரிகள் சங்கத்தினர் முன்னதாக கடந்த 2 நாட்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன் அடுத்த கட்டமாகவே நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு துறைமுகம் மற்றும் காலி துறைமுகம் உள்ளிட்ட பொதுமக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் தொழிற்சங்க நடவடிக்கை அமுல்படுத்தப்படமாட்டாது எனவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சுங்க அதிகாரிகள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள பொருட்களை விடுவிப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# சிலாபம்-கொழும்பு பிரதான வீதியில் விபத்து; ஒருவர் பலி! 35 இற்கும் மேற்பட்டோர் காயம்!!

கொழும்பு, ஜூலை 05

சிலாபம்-கொழும்பு பிரதான வீதியில் மாதம்பே, இரட்டைக் குளம் பகுதியில் நேற்று பஸ் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் 35இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்து இடம்பெற்றபோது அப்பகுதியில் மழையுடன் கூடிய காலநிலை காணப்பட்டதாகவும் மாதம்பே பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

## வர்த்தக உடன்பாட்டு பலன் இந்தியரைவிட இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கே அதிகம்!

### தூதுவர் சந்தோஷ் ஜா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 05

தற்போதுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பலன் இந்திய ஏற்றுமதியாளர்களை விட இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கே அதிகம் கிடைத்துள்ளது என இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள விருந்தமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன், இந்தியா மற்றும் இலங்கைக்கான இருதரப்பு உறவுகளும் மிகச் சிறந்த முறையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# 15ஆம் திகதி முதல் அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவு!

கொழும்பு, ஜூலை 05

அஸ்வெசும நிவாரண திட்டத்தின் இரண்டாம் கட்ட மக்களை தொகை கணக்கெடுப்பு பணி எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

நலன்புரி நலன்கள் சபையுடன் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட கணக்கெடுப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாத மக்களுக்கு அடுத்த வாரத்துக்குள் அவகாசம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்காக 4 இலட்சத்து 75 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## 2025 பட்ஜெட் நிறைவேறினால்தான் அரச ஊழியருக்கு சம்பளம் உயரும்!

கொழும்பு, ஜூலை 05

2025ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டால்தான் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியம், சமுர்த்தி கொடுப்பனவு, அஸ்வெசும கொடுப்பனவு என்பன வழங்கப்படும் என போக்குவரத்து மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்னும் சில மாதங்களில், 2025ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிக்கப்பட உள்ளது என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5லட்சத்துக்கும்...

இதுவரை 5 ஆயிரத்து 449 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் மொத்த பெறுமதி சுமார் 197. 5 கோடி ரூபாயாகும்.

யுக்திய நடவடிக்கையில் போதைப் பொருள் தொடர்பாக இதுவரை ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 5 ஆயிரத்து 448 பேர் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## கெஹலிய...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முடக்கப்பட்ட நிலையான வைப்பு கணக்குகள் மற்றும் காப்புறுதி பத்திரங்களின் மதிப்பு ரூ. 9 கோடியே 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயாகும்.

கெஹலியவின் மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகன் ஆகியோருக்கு சொந்தமான 16 வங்கிக் கணக்குகள் மற்றும் காப்புறுதி பத்திரங்களே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் ரம்புக்வெல தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 53(1) இன் படி, பிரிவு 42 இன் கீழ் நடத்தப்படும் விசாரணையின் ஒரு பகுதியாக இந்த முடக்க உத்தரவு இலஞ்ச ஆணைக் குழுவால் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரா.சம்பந்தனின்...

கொண்டுவரப்பட்ட சம்பந்தனின் பூதவுடலுக்கு கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இதில், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் கட்சியின் நிர்வாகிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தந்தை செல்வா கேட்போர்கூடத்துக்கு கொண்டு செல்லப்பட்ட இரா. சம்பந்தனின் உடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இன்றைய தினம் மீண்டும் சிறப்பு விமானம் மூலமாக சம்பந்தனின் உடல் திருகோணமலைக்கு கொண்டு செல்லப்படும். நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறும். (ஐ)

## சஜித்...

நண்பர்களும் அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த தலைவர்களில் ஒருவராகவும் செயல்பட்ட ராஜித சேனாரட்ன, விரைவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவார் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக முன்னிறுத்தும் நோக்கில் பல்வேறு கட்சிகளை இணைந்து கூட்டணியொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டணியை உருவாக்கும் முக்கிய நபர்களில் ஒருவராக ராஜித சேனாரட்னவும் செயல்படவுள்ளார். கூட்டணியில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவை இணைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, விரைவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை வெளிப்படுத்துவார் என்றும் கூறப்படுகின்றது. (அ)

## இந்த...

இல்லை - என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, ஜனாதி பதித் தேர்தல் திகதியை நீதிமன்றம் விளக்கமளிக் கும் வரை தற்போதைய திட்டமிட்டபடி ஜனாதி பதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி வர்த்தகரான தயான் லெனவ நேற்று முன் தினம் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார். (ஐ)

## சம்பந்தனின்...

சிறீதரன் எம். பி. கூறினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார். அவரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வி...

இவர், 1986ஆம் ஆண்டு ஆசிரியராக அரச சேவையில் இணைந்த அவர், அதிபர், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்வி பணிப்பாளர், மேலதிக மாகாண கல்வி பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தயிரில்...

யோ.ரவீந்திரன், கே. சதீஸ்குமார் ஆகியோர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் குறித்த பாற்சாலையில் சோதனை நடத்தினர். இதன்போது, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தயி ரில் புழுக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து, குறித்த பாற்சாலைக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் நிறுவனத்தின் முகாமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதையடுத்து, அந்த பாற்சாலை சுகாதார சீர்கேட்டை சரிசெய்யும்வரை சீல் வைத்து மூட உத்தரவிட்ட நீதிவான் லெனின் குமார், 30 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார். (ஐ)

## வடக்கு...

மத அடிப்படையில் இனங்கள் ஒன்றிணைய வேண்டும். இந்த பிரபஞ்சம் செயல்திட்டத்தின் மூலம் இன, மத, சாதி, வர்க்க, கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இவை அனைத்தும் வாய்மொழியாகச் சொல்லப்படுவது போலவே செயல்படுத்துவேன். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வர் என்ற வகையில் வடக்கு, கிழக்கு இரண்டு மாகாணங்களை மையப்படுத்தி சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடாத்தி, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரிவிலும் கிராமங்களிலும் அபிவிருத்தி அலகுகளை நிறுவுவேன்.

மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு குறித்து ஆராய்ந்த போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு மிகக் குறைவான மட்டத்திலேயே காணப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேல் மாகா ணம் 42 வீத பங்களிப்பை வழங்கி வருகிறது. மீதமுள்ள 58 வீத பங்க ளிப்பை ஏனைய 8 மாகாணங்களும் வழங்கி வருகின்றன. கிழக்கு மாகாணம் 5 வீதத்துக்கும் குறைவான பங்களிப்பையே வழங்கி வருகிறது.

உலகில் பல நாடுகள் யுத்தம் முடிவடைந்து சர்வதேச நன்கொடையாளர் மாநாடுகளை நடத்திய போதிலும், எமது நாட்டில் யுத்தம் முடிவடைந்து இன்று வரையில் 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அன்று தொடக்கம் இன்று வரையுள்ள எந்தத் தலைவராலும் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்ட முடியவில்லை - என்றும் கூறினார்.

# ஆட்சியியல் மறுசீரமைப்பாலேயே கடன் மறுசீரமைப்பில் இணக்கம்!

### நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்

கொழும்பு, ஜூலை 05

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட செயல்திறன்மிக்க பொருளாதார மற்றும் ஆட்சியியல் மறுசீரமைப்புகளின் பிரதிபலிப்பாகவே சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் எட்டப்பட்டிருக்கும் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை கருத முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் ஸ்திரத்தன்மை குறித்த சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கைக்கும் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவினருக்கும் இடையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது "எக்ஸ்" தளத்தில் அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தவை வருமாறு,

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவுடன் இணக்கப்பாடொன்றை எட்டியிருப்பதன் மூலம், அந்தக் குழுவினருடனான பேச்சுகளை இலங்கை வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டுவந்திருக்கின்றது என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இணக்கப்பாட்டின்படி 37 பில்லியன் டொலர் பெறுமதியான மொத்த சர்வதேசக் கடன்களில் 12.5 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் மறுசீரமைக்கப்படும். நாட்டின் கடன் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி தாம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளில் இந்த இணக்கப்பாடு மிகமுக்கியமான நகர்வாகும்.

"சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் எட்டப்பட்டிருக்கும் இணக்கப்பாடு கடன் ஸ்திரத்தன்மை தொடர்பான அடைவு மட்டத்தையும், நிபந்தனைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழுவும், சர்வதேச நாணய நிதியமும் இதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டியுள்ளது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா பணிமனை திறப்பு



கொழும்பு, ஜூலை 05

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட நகர பணிமனை கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, பண்டாரிக்குளம், பாடசாலை வீதியில் குறித்த பணிமனை நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது கட்சியின் பொது செயலாளர், வன்னி தேர்தல் தொகுதி அமைப்பாளர், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், அங்கிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொடிகளை பறக்க விட்டபடி ஊர்வலமாக வவுனியா, பண்டாரிக்குளம், பாடசாலை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகத்திற்கு சென்றிருந்தனர்.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார பணிமனை பெயர்பலகையை திரை நீக்கம் செய்து வைத்துடன், பணிமனையையும் நாடா வெட்டி திறந்து வைத்தார். (ஐ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சடலங்களைப் பாதுகாப்பதில் சிரமம்!

கொழும்பு, ஜூலை 05

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் அடையாளம் தெரியாத சடலங்கள் 06 மாதங்களுக்கும் மேலாக வைக்கப்பட்டுள்ளதால் சடலங்களை சேமிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் பெரும்பாலான சடலங்கள் விபத்துக்கள் காரணமாக பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டதாக மரண விசாரணை அதிகாரி கூறுகிறார்.

மேலும், உரிமையாளர்கள் முன்வராததால், விசாரணைகளை மேற்கொண்டு சடலங்களை அகற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றை ஒப்படைத்த பொலிஸார் அல்லது அவர்களது உறவினர்களுக்கோ பல தடவைகள் அறிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறுகிறார்.

இந்நிலையில் உரிமையாளர்கள் முன் வந்து சடலங்களை பொறுப்பேற்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கொஹூவல, மொரட்டுமுல்ல, கிருலப்பனை, மொரட்டுவ, இங்கிரிய, மஹரகம, மருதானை, பிலியந்தலை, வாதுவ, எகொட உயன ஆகிய பொலிஸ் நிலையங்களில் பெரும்பாலான சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஆசிரியர் மீது மிளகாய்த் தூள் தூவி தங்க சங்கிலி கொள்ளை

## சந்தேக நபர் கைது

கொழும்பு, ஜூலை 05

பசறை - கொட்டமுதுன பகுதியில் ஆசிரியர் ஒருவரின் கழுத் தில் இருந்த சங்கிலியை கண்ணுக்குள் மிளகாய் தூள் தூவி அறுத்துச் சென்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தல-பெல்வத்தைப் பகுதி யைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை முடிந்து வீடு செல்லும் வழியில் மறைந்திருந்த குறித்த நபர் அந்த வழியில் சென்ற ஆசிரியை ஒருவரின் கண்ணுக்கு மிளகாய்த் தூளைத் தூவி விட்டு கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துள்ளதுடன், காட்டுப் பகுதிக்குள் சென்று மறைவாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த சந்தேகநபர் ஹிங்குருகடுவ பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

குறித்த சந்தேகநபரை பசறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம் பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிங்குருகடுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு!

கொழும்பு, ஜூலை 05

உடன் அமுலாகும் வகையில், சில வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை லங்கா சத்தொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதன்படி சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மொத்தக் கொள்வனவின்போது கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் குறைக்கப்பட்டு, 215 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு பருப்பு மொத்தக் கொள்வனவின்போது, கிலோ ஒன்று 14 ரூபாவால் குறைக்கப்பட்டு 282 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வெள்ளை சீனி மொத்தக் கொள்வனவின்போது கிலோ ஒன்று 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 269 ரூபாவாக உள்ளது. (அ)

# சுங்க திணைக்களத்தின் போராட்டம் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 05

இலங்கை சுங்க தொழிற் சங்கங்கள் மேற்கொள்ளவிருந்த தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட் டது.

நிதி இராஜாங்க அமைச் சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் நடைபெற்ற கலந்து ரையாடலை அடுத்தே இந்தப் போராட்டம் கைவிடப்படுவதாக சுங்க ஒன்றிய சம்மேளனம் தீர்மானித்துள்ளது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலை எவரும் பிற்போடமுடியாது

## ஜே. வி. பி. சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

ஜனாதிபதித் தேர்தலை எவரும் பிற்போட முடியாது. எதிர்வரும் செப்ரெம்பர் - ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ரணிலின் நரித்தனம் இனி எடுபடாது. மக்கள் இவ்வாறானவர்களின் பொய்க் கதையை நம்ப வேண்டாம். இரண்டு மாதங்களுக்கு முன்பு ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியின் பொதுச் செயலாளர் தேர்தலை ஒத்திவைப்பதாக முட்டி போட்டார் - அது உடனேயே உடைந்துவிட்டது.

தற்போது ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்து ஒரு முட்டி போடப்பட்டுள்ளது - அதுவும் உடைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திஸநாயக்கவே வெற்றி பெறுவார் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜப்பானின் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக பரந்த பேச்சு

## அமைச்சர் அலி சப்ரி ஆரம்பித்தார்

கொழும்பு, ஜூலை 05

**ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துதல், இலங்கையில் ஜப்பானின் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பது குறித்தும் பல்வேறு உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவினருடன் பரந்துபட்ட பேச்சுகளை முன்னெடுத்துள்ளார்.**

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின்பேரில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இந்த மாதம் 1 - 7 ஆம் திகதி வரை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தில், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா, சிரேஷ்ட அமைச்சரவை செயலாளர் ஹயாஷி யொஷிமஸா, நீதியமைச்சர் யுச்சி கொய்ஸூமி ஆகியோர் உள்ளடங்கலாக பல்வேறு உயர்மட்ட தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.


அதன் நீட்சியாக இலங்கையில் முக்கிய முதலீடுகளை மேற்கொண்டிருக்கும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் (ஜைக்கா) சிரேஷ்ட நிர்வாக பிரிவு அதிகாரிகளுக்கும் அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி செயல் திட்டங்களை உடனடியாக மீள ஆரம்பிப்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர், ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, ஜூலை 05

இலங்கை, நேபாளம், மாலைதீவுக்கான உலக வங்கியின் புதிய பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்றது.



சிஸ்லேனுக்கு முன்னர் உலக வங்கி வதிவிட பணிப்பாளராக பரீஸ் ஹதாத் சர்வோஸ் பணியாற்றினார்.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான உப தலைவர் மார்டின் ரயிசர், உலக வங்கியின் தெற்காசியா, இலங்கை, மாலைதீவுக்கான முகாமையாளர் கியோ கந்தா மற்றும் பொருளாதர அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர். எச். எஸ். சமரதுங்க உட்பட்டோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

# போலியான கடவுச்சீட்டை பெற்ற இலங்கையர் சென்னையில் கைது!

சென்னை, ஜூலை 05

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து, இந்தியாவின் கடவுச் சீட்டை பெற்ற இலங்கையர் ஒருவர் சென்னையில் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் இலங்கைக்கு வருவதற்காகச் சென்னை விமான நிலையத்தில் கடவுச் சீட்டை காண்பித்தபோது, கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

அவர் தமது குடும்பத்தாருடன் இலங்கையிலிருந்து ஏதிலியாகத் தமிழகம் சென்று வசித்து வந்த நிலையில், 2019ஆம் ஆண்டு போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தியக் கடவுச் சீட்டை பெற்றுக் கொண்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக தம்மிக பெரேராவை நிறுத்த ஆலோசனை!

## பஸில் ராஜபக்ஷ நடத்தினார்

கொழும்பு, ஜூலை 05

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேராவை முன்னிறுத்துவது குறித்து பஸில் ராஜபக்ஷ கட்சியினருடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்று தென்னிலங்கை தரப்புகள் தெரிவித்துள்ளன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பல்வேறு நெருக்கடிகள் எழுந்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக ஒரு தரப்பும் எதிராக ஒரு தரப்பும் உருவாகியுள்ளது.

அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவும் அவருக்கு ஆதரவானவர்களும் வர்த்தகர் தம்மிக பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக முன் நிறுத்த வேண்டும் என தொடர்ச்சியாக கட்சிக்குள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவும் தம்மிக பெரேராவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தால் வெற்றியின் பின்னர் அவர் பொதுஜன பெரமுனவை ஓரங்கட்டிவிடுவார் என நாமல் தரப்பு சுட்டிக்காட்டி வருவதுடன், தமது கட்சியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளது.

என்றாலும், ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பராக கருதப்படும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருப்பதாக அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தம்மிக பெரேராவை வேட்பாளராக முன்னிறுத்துவது குறித்து பஸில் ராஜபக்ஷ கட்சியினருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன் நடைபெற்ற சந்திப்பிலும் தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் தம்மிக பெரேரா முன்னிலையில் இருப்பதாக கூறியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறான பின்புலத்தில் விரைவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் தீர்மானமிக்க சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக அறிய முடிகிறது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org